# நடைபாதை, கால்வாய்களை மூடிய 10 கடைகளின் கட்டுமானம் தகர்க்கப்பட்டது

கோலாலம்பூர், ஜன.8-
சிகாம்புட்டில் நடைபாதை, கால்வாய்களை மூடிய 10 கடைகளின் கூடுதல் கட்டுமானப் பகுதிகள் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தால் (டிபிகேஎல்) தகர்க்கப்பட்டது.

தங்கள் விருப்பம்போல் நடைபாதைகளிலும் கால்வாய் பகுதிகளிலும் கூடுதல் கட்டுமானங்களை மேற்கொண்டிருந்த பகுதிகள் இடித்துத் தள்ளப்படுவது உட்பட சிகாம்புட்டைச் சுற்றியுள்ள பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள வணிகப் பொருட்களைப் பறிமுதல் செய்வதற்கும் ஒருங்கிணைந்த கூட்டு சோதனை நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டதாக டிபிகேஎல் கூறியது.



டிபிகேஎல் அமலாக்கப் பிரிவு, இயந்திரவியல் - மின் பொறியியல் இலாகா, நகர்ப்புற போக்குவரத்து இலாகா, சுகாதாரம், சுற்றுச்சூழல் இலாகா, சிகாம்புட் கிளை அலுவலகம் ஆகியவை இதில் ஈடுபட்டிருந்தன.

இதனுடன் போலீஸ், சிலாங்கூர் நீர் விநியோக நிறுவனம், திடக்கழிவு மேலாண்மை - பொது துப்புரவு நிறுவனம் உட்பட ஆலம் ஃப்ளோரா நிறுவனமும் இதில் ஈடுபட்டிருந்தன.

இச்சோதனை நடவடிக்கையின்போது வடிகால், நடை பாதைகளை மறைக்கும் வகையில் கூடுதல் கட்டமைப்புகளைக் கொண்டிருந்த 10 கடைகளின் ஒரு பகுதி இடிக்கப்பட்டதாக அது நேற்று தனது ஃபேஸ்புக்கில் கூறியது.

மேலும் இரண்டு கடை உரிமையாளர்களும் தாங்களாகவே இணைப்புக் கட்டமைப்புப் பகுதிகளை அகற்றுவதாக உறுதியளித்தனர்.

1974ஆம் ஆண்டு சாலை, வடிகால், கட்டடங்கள் சட்டத்தின் கீழ் பொது இடங்களில் வணிகப் பொருட்களை வைப்பதற்கான குற்றத்திற்காக மொத்தம் ஏழு சம்மன்கள் சார்வு செய்யப்பட்ட வேளையில், அதன் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

இதனிடையே, டிபிகேஎல் ஒப்புதல் இன்றி வீடு ஒன்று கட்டப்பட்டிருந்த வேளையில், அதுவும் இடித்துத் தள்ளப்பட்டதாகவும் அது கூறியது.